முருகப்பெருமான் துணை

**மகான் நேச நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.08.2022, புதன்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கா
   தருமனே ஞான அவதாரமே
   அவனிகாக்க வந்த தேசிகா
   அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது நள்ளி திங்கள்
   குறைவிலா இருபானை திகதி புந்திவாரம்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 25 நாள், 10.08.2022 புதன்கிழமை)
   தெரிவிப்பேன் அருளாசி தன்னை
   தேசிகனுக்கு நேச நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர்வான தருமபலத்துடன் இனிதே
   ஞானம் அருளும் அரங்கன் வழி
   ஞானபண்டிதனார் வரம்பெற்ற வழியாகும்
4. வழிதனை உலகமக்களெல்லாம்
   வணங்கி ஏற்றுத் தொடர
   அழியாமை தரும் ஞானம்தனை
   அரங்கமகான் ஆசிபட கற்றுவர
5. வருகவே மக்களிடை மாற்றமாக
   வந்தடையும் நற்குணங்கள்
   தரும சிந்தை தயவின் செயலாக
   தன்னார்வத் தொண்டுமாகப் பெருகும்
6. பெருகவே எங்கும் மக்களிடை
   பெருந்தன்மை கூடி வழிபாடு
   முருகப்பெருமான் மேலாகக் கூடி
   முழுமைபட ஞானபலம் கிட்டும்
7. கிட்டவே ஆளுமை சக்தியிடையும்
   குருபரன் வழிபாடு பெருகியே
   தட்டாது ஞான ஆட்சிகாலம்
   தரணியே கண்டடைய நேரும்
8. நேருமை கொண்ட மக்களே
   நிறைந்த நல் உலகமாகி
   பெருமை மிக்க அதிகாரிகளும்
   பேராசை சுயநலமில்லா தலைமையும்
9. தலைமையும் சகல துறைகளிலும்
   தக்கபடி அமைந்து சிறக்கும்
   பிழை ஊழல் என்பதே இல்லா
   பேதமில்லா ஆட்சிக்காலமாக

10. ஆகவே மாற்றம் காண்கும்
அரங்கமகான் வந்த நோக்கம்
செகமெல்லாம் அடைந்து இனிதே
சித்தர்கள் நிறைந்த சபையாக

11. ஆகவே ஞானசபை எனும்
ஆற்றல் நிரம்பி மண்ணுலகம்
மகான்கள் ஆட்சி கண்டடையும்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–